1990 ஏப்ரல் 6]

யார் கட்டுவது என்ற காரணத்தில் அந்தத் திட்டம் அப்படியே இருக்கிறது. அந்தப் பணத்தைக் கட்டுவதன் மூலம், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் முலம் அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். இப்போது பல கிராமங்களில் அமைக்கப் பட்டிருக்கும்படியான அந்தப் பைப்புகள் குறிப்பாக, செட்டிப் பட்டி, கோட்டூர் போன்ற பகுதிகளிலே தண்ணீர் போகாத காரணத்தால் மக்களுக்குப் பயன் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுகிற திட்டங்களிலே இருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான், இந்தச் சட்ட மன்றம் நடைபெறுகின்ற நாட்களில் ஒவ்வொரு நாளும் மாலை 4 மணியிலிருந்து 9 மணி வரையில் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளும் அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த குடிநீர் வாரியத் தலைமைப் பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர், ஆகியோரை அழைத்து வைத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் நேருக்கு நேராக அவர்களுடைய பிரச்சினைகளைச் சொல்லி, விவாதித்து அதற்கான முடிவுகளை எடுப்பதற்குக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதுவரை ஏறத்தாழ 7 மாவட்டங்களில் இது போன்ற பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு அதற்கான முடிவுகளை எப்படி எடுப்பது என்று ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டிருகின்றன. உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை அவருடைய மாவட்டம்பற்றி நடைபெறும் கலந்துரையாடலில் சொன்னால் அதற்கான ஏற்பாடுகளை, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளும் அரசும் உடனடியாகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்கரை ஊராட்சிக்கான குடிநீர்த் திட்டம்

*4210. திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குருந்தங்கோடு ஒன்றியம், தென்கரை ஊராட்சிக்கான குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறதா ?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கோட்டவிளை மற்றும் ஆறு குடியிருப்புகளுக்குத் திறந்த வெளிக் கிணற்றினை குடிநீர் ஆதாரமாகக்கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டது. மேற்கண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தோப்பு மற்றும் தென்கரை குடியிருப்புகளும் பயன் பெறும் வகையில் திட்டமிடப்பட்டது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் முடிக்கப்பெற்று ஊராட்சியில் பராமரிப்பிற்காக 15—11—1984-ல் ஒப்படைக்கப்பட்டது. எனினும், குடிநீர் ஆதாரமான திறந்த வெளிக் கிணற்றில் கோட்டவிளை, பிராந்தன சேரி, புன்னவிளை, ஆளூர் மற்றும் சுங்கான்கடை ஆகிய ஐந்து குடியிருப்புகளுக்கு மட்டுமே நீர் வழங்குமளவிற்கு கிணற்றின் கொடுதிறன் இருந்ததால், இத்திட்டத்தின் கடைநிலைப் பகுதியி லுள்ள தோப்பு மற்றும் தென்கரை குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்கரை ஊராட்சியில் 6 ஆண்டுகளுக்கு முன்பே குடிநீர் மேல்நிலைத் தண்ணீர் தொட்டி கட்டப்பட்டு, கடந்த 6 ஆண்டுகாலமாக அந்தப் பகுதியிலே வாழுகின்றமக்கள் தண்ணீர்த் தொட்டியை தாகத்தோடு பார்த்துக்கொண்டே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விரைவிலே அந்தத் தொட்டியில் நீர் நிரப்பப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்குக் குடி தண்ணீர் விநியோகம் செய்யப்படுகின்ற வகையில், துரித நட வடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசால் இதுபோன்ற குடிநீர் தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டு, அதற்கு நீர் ஆதாரம் இல்லாத இடங்களை முன்னுரிமை எடுத்துக் கொண்டு அதை வேகப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்கரை ஊராட்சிப் பகுதியில் ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற தென்கரை பகுதி இந்தத் திட்டத்தோடு இணைக்கப் படாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, இந்தக் குடி நீர்த்திட்டம் அமலாக்கப்படும்போது, ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற தென்கரை உள்ளிட்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 6]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தினை இந்த அரசு நிச்சயமாகக் கருத்திலே கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள் —விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால்; அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. எஸ். ஆர். இராதா : ** * * * * *

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்,)

4. கவன ஈர்ப்பு

(அ) சென்னையில் சிறு தொழில்களுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் குடியிருப்புகளாகப் பயன்படுத்தப்படுவதால் சிறு தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அடுத்ததாக, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு. திரு. செங்கை சிவம் அவர்கள் மாண்புமிகு சமூக நலன் —ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னையில் சிறு தொழிலுக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்களைப் பலர் குடியிருப்பதற்கு உபயோகப்படுத்தி வருவதால் சிறுதொழில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை. மாண்புமிகு சமூக நலன்—ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ** (கூச்சல் — குழப்பம்).

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.